# பொதுக்காலத்தின் இருபத்திநான்காம் ஞாயிறு

*திருவழிப்பாட்டு ஆண்டு* A *(14-09-2014)*

### *திருப்பலி முன்னுரை*

இறையேசுவில் பிரியமுள்ள இறைத்தந்தைக்கும், இறைச்சமுகத்திற்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள் கூறி இன்றைய திருவழிபாட்டிற்கு அன்போடு அழைக்கிறோம். இன்று நாம் பொதுக்காலத்தின் இருபத்திநான்காம் ஞாயிறை நம் தாயாம் திருச்சபையோடு கொண்டாடுகின்றோம். அத்தோடு, நம் ஆண்டவரின் திருச் சிலுவையின் மகிமை விழாத் திருப்பலியையும் கொண்டாடுகின்றோம்.

தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார். என்னும் இறைச் செய்திகள் வழியாக, மனிதர்களாகிய நம்மீது, கடவுள் எவ்வளவு கரிசனையும், பேரிரக்கமும் கொண்டுள்ளார் என்பதை மிகவும் ஆழமாக எடுத்துக் கூறுகின்றன. கடவுளை நம் தந்தையாகவும், ஆயனாகவும் கொண்டிருக்கும் நாம் கடவுளுக்கு எதிராக முணு முணுக்காமல், அவரது பேரிரக்கத்தை முன்னிட்டு எப்போதும் அவருக்கு நன்றிப் பலி செலுத்துகின்றவர்களாக வாழ இத்திருப்பலியில் வரம் கேட்டுச் செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**பணியாளருக்குத் துணையாய் இருக்கும் தந்தையே இறைவா!**

எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள்,அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம்: இயேசு கொண்டிருந்த மன நிலையை அவர்களும் கொண்டிருந்து மக்கள் மேல் அன்பும், கரிசனையும் கொண்டவர்களாக, இக்காலத்தில் தங்களின் சேவை எத்தகையது என்பதைப் புரிந்து கொண்டு வாழ அவர்களுக்கு தேவையான ஞான வெளிச்சத்தை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உமது கீழ்ப்படிதலால் சிலுவைச் சாவை ஏற்றுக்கொண்ட இறைவா,**

உம்மைப் போற்றுகிறோம். உமது சிலுவையால் எங்களை மீட்டுக்கொண்டதற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். எங்கள் வாழ்வின் சிலுவைகளை உற்றுப்பார்த்து, அவற்றில் இறைத்திருவுளத்திற்குப் பணிந்து வாழ வரம் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இரக்கத்தின் ஊற்றே இறைவா!**

எம் இளைஞர்கள் ஒவ்வொருவரும் உலகத்தின் மாயக் கவர்ச்சிகளில் தங்கள் உள்ளத்தையும், உடலையும் பறிகொடுக்காது, தமது இதயத்தை உமக்காக மாத்திரமே கொடுத்து, உம்முடைய வாழ்வுதரும் வார்த்தைகளை தம் இதயத்தில் சுமந்து உம்மைப் பின் பற்றி நிறைவடையும் நல்லுள்ளத்தை அவர்களுக்குள் உருவாக்கிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எங்கள் தந்தையாகிய தந்தையே!**

துன்பங்களாலும், துயரங்களாலும், வறுமையாலும் வாடிக்கொண்டிருக்கும் அனைவர்மீதும் இரங்கி, ஆசி வழங்கி, உம் திருமுக ஒளியை அவர்கள்மீது வீசி அமைதியையும், மகிழ்ச்சியையும் அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!**

நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உன்னதரான தந்தையே இறைவா!**

மக்கள் அனைவரும் தீமைக்கும், தீயவர்களுக்கும், அநீதிக்கும், வன்முறைக்கும் துணைபோகின்ற மனநிலையை விட்டொழித்து: உமது குரலுக்குச் செவிசாய்த்து நீர் காட்டும் வழியைப் பின்பற்றி உலக அமைதிக்காக உழைக்கின்ற மன நிலையை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**சிலுவை வழியாக மீட்பு தந்த இயேசுவே,**

உம்மைப் போற்றுகிறேன். துன்பத்தின், அவமானத்தின் சின்னமான சிலுவையை, மீட்பின், மாட்சியின் அடையாளமாக மாற்றினீரே. இந்த சிலுவைக்காக உமக்கு நன்றி. எனது வாழ்விலும் சிலுவை என நான் கருதும் அனைத்தையும், உம்மோடு சுமந்து, உமது வெற்றியிலும், மாட்சியிலும் நானும் பங்கு பெற ஆற்றல் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.